
# கன்று வளர்ப்பு



கல்வி பயிற்சி தகவல் பிரிவு,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
சுற்றம்பே, பேராதனை.

GOVT. VETERINARY SURGEON
KOPAY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்றுவளர்ப்பினது முக்கியத்துவம்

எமது நாட்டில் சில இடங்களில் கன்றுகளின் இறப்பு வீதம் 30 - 35 % என ஆராய்ச்சிகளின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கன்று இறப்பு விவசாயிகளைப் பொறுத்தவரையில் பெரும் இழப்பாகும். இது இந்நாட்டின் பால் உற்பத்தியைப் பெரிதாகப் பாதிக்கின்றது. இவ்விளைவுகளால் விவசாயிகள் உற்சாகமிழக்கின்றனர். எனவே கன்று இறப்பைத் தடுத்தல் அவசியமாகும்.

கன்று இறப்பை ஏற்படுத்துவதற்கான காரணிகளை **இருவகையாகப் பிரிக்கலாம்.**

1. பராமரிப்பு முறை
2. சுகாதாரக் கவனிப்பு

கீழே தரப்படும் இவ் இரு முறைகள் பற்றிய விபரங்களைக் கடைப்பிடித்தால் கன்று இறப்பைக் குறைக்கலாம் என்பது எமது நம்பிக்கை.

### பராமரிப்பு முறை

கன்று பசுவினது கருப்பையில் இருக்கும் காலம் தொடக்கம் கன்றுப் பராமரிப்பு மிக முக்கியமானது. எனவே கன்றுப் பராமரிப்பை அக்காலத்திலிருந்தே ஆரம்பித்தல் வேண்டும். நன்கு வளர்ந்த சுகதேகியான கன்றைப் பெற வேண்டுமானல் சினைப்பட்ட பசுவிற்கு நன்கு உணவூட்டல் வேண்டும். கர்ப்பகாலத்தின் கடைசி இரண்டு, மூன்று மாதங்களில்தான் கன்றினது கூடிய பகுதி ( 2/3 பகுதி ) வளர்ச்சி முற்றுப் பெறுகிறது. இந்நேரத்தில் பசுவிலிருந்து பால்கறப்பது நிறுத்தப்படல் வேண்டும். எனவே சினைப்பட்ட பசுவை நல்ல போசாக்கு உணவு கொடுத்து பராமரித்தல் வேண்டும். ஒரு சராசரியான பசுவிற்கு நாள் ஒன்றிற்கு 16 % புரதத்தைக் கொண்ட சிறிது அடர்வுத்தீனையும், 80 - 90 இரு. தரமான புல்லையும், சிறிதளவு கனிப்பொருளையும் கொடுத்தல் வேண்டும்.

அதிகளவு பால் உற்பத்தியைப் பெறக்கூடிய இடங்களான மத்திய, மலை நாட்டுப் பகுதிகளில் கன்று இறப்பு ஏற்படுவது கன்றுகளுக்குத் தேவையான அளவு பாலை விடக்குறைவான பாலைக் கொடுப்பதாலாகும். விவசாயிகள் போதியளவு பாலைக் கன்றிற்கு என்று கொடுக்காமல் அப்பாலை விற்பதற்கு முயல்கின்றனர். உலர் வலயத்தில் கன்றுகளுக்குப் பால் மறப்பித்தலின் பின் போதியளவு உணவு கொடுக்காமல் விடுவதால் கன்றுகளின் இறப்பு காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கன்றீனும் இடம்**

கன்றீனும் இடத்தை நன்கு துப்பரவு செய்து 4% சலவைச்சோடாவோ அல்லது வேறு கிருமி நாசினி கொண்டோ தொற்று நீக்கப்படல் வேண்டும். போதியளவு காய்ந்த புல் அல்லது வைக்கோல் மூலம் படுக்கை போன்று செய்து அவற்றைத் தயார் செய்ய வேண்டும். கன்று ஈனுவதற்கு ஒரு வாத்திற்கு முன்னதாகவே பசுவை அவ்விடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். தொழுவமானது விவசாயிகளின் வீட்டிற்கு அண்மையில் அமைக்கப்படுமாயின் தொடர்ந்த கவனிப்பிற்கு இலகுவானதாக இருக்கும். கொட்டிலினுள் போதியளவு ஒளி ஊடுபுகவிடலும் முக்கியமானதாகும்.

**கன்று ஈனல் :-**

கன்று ஈனல் நெருங்கும்போது காணப்படும் அறிகுறிகள் :-

- பால்மடி வீங்கும். சிலவேளைகளில் கடும்புப்பால் துளியாகக் கசியும்.
- யோனி முகம் வீங்கும்.
- யோனிமடலிலிருந்து வெள்ளைநிற தடித்த சளியம் வெளியேறும்.
- பசு அமைதியற்றுக் காணப்படும். (படுப்பதும் எழும்புவதுமாக இருக்கும்)

மேல் குறிப்பிட்ட அறிகுறிகள் காணப்பட்டால் பசு கன்றீனலுக்கு நெருங்குகிறது எனத் தெரிந்து கொள்ளலாம். இந்நிலையில் பசு கயிற்றால் கட்டப்பட்டிருந்தால் அதைத் தளர்வாக்கி அல்லது அவிழ்த்துவிடல் வேண்டும்.

பொதுவாக கன்று ஈனும்போது கன்றின் முன்னங்கால்களும் அதனைத் தொடர்ந்து தலையும் உடலும் வெளிவரும். சில வேளையில் முன்னங்கால்கள் முதலில் வெளிவருவதற்குப் பதிலாக பின்னங்கால்கள் முதலில் வெளிவரலாம். இது அசாதாரண நிலையாகும். இந்நிலையில் மிருகவைத்தியரின் உதவியை நாடி, பசுவிற்கு கன்று ஈனுவதற்கு உதவி செய்தல் வேண்டும்.

**கன்றீனலின்போது உதவி செய்யவேண்டிய சந்தர்ப்பங்கள் :-**

- கன்று ஈனல் ஆரம்பித்து 2 - 3 மணி இல் முற்றுப்பெறுவிடின் கன்று ஈனலுக்கு உதவி செய்தல் வேண்டும்.
- நீர்பை வெளியேறி 2 மணியின் பின்னரும் கன்று வெளிவராதுவிட்டால் உதவி செய்தல் வேண்டும்.

உதவி செய்ய முனையும்போது உங்களது கை சுத்தமானதாக இருத்தல் மிக முக்கியம். இரு கால்களும் தலையும் தெரியும் நேரத்தில் இரு கைகளின் உதவியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் தலையில் பிடித்து வெளியேறும் அசைவிற்கு ஏற்ப இழுத்தெடுக்க வேண்டும். ஆனால் தலை, முன்னங்கால்கள் தெரியாது இருந்தால் உடனடியாக மிருக வைத்தியருடன் தொடர்பு கொள்ளவும்.

10 % ஆன கன்று இறப்பு பிறப்பிலேயே ஏற்படுகிறது என அறியப்பட்டது. எனவே கன்று ஈனும் காலத்தில் சரியான கவனம் எடுப்போமாயின் இதனைக் குறைக்க முடியும்.

வழமையாக நஞ்சுக்கொடி கன்று பிறந்து 7 மணித்தியாலங்களில் விழுந்துவிடும். அவ்வாறு நிகழாவிடத்து மிருகவைத்தியரின் உதவியை நாடுக. அத்துடன் நஞ்சுக் கொடியை பசு உண்ணாது, அதை நிலத்தில் புதைத்துவிட வேண்டும். நஞ்சுக்கொடியை உண்பதனால் பால் உற்பத்தி குறையும் சாத்தியக்கூறு காணப்படுகிறது. ஏனெனில் சமிபாடடைய மாட்டாத புரதம் காணப்படுவது ஆகும்.

## புதிதாகப் பிறந்த கன்று

கன்று ஈன்றவுடன் தாய்ப்பசுவால் கன்றை நக்கவிடவும். அவ்வாறு செய்வதன் மூலம் சளியத்தை அகற்றி கன்றின் இரத்தோட்டத்தை துரிதப்படுத்தும்.

கன்று பிறந்தவுடன் சுவாசிக்கத் தொடங்கவில்லையென்றால் அதன் மூக்குப் பகுதியிலிருக்கும் சளியத்தை அகற்றி, அதன் மார்புப் பகுதியை நன்கு தடவி சுவாசிப்பதற்கு உதவவேண்டும். தொப்புள் நாண் விழுந்தவுடன் அயடின் பூசவும். தொப்புழ் நாண் காயம் உலராவிடின் நாள் ஒன்றிற்கு இரு தடவைகள் வேப்பெண்ணெயை தொடர்ந்து 7 நாட்களுக்குப் பூசவும். கன்றை நிறுத்து நிறையைக் குறிக்கவும்.

வழமையாகக் கன்று பிறந்து அரை மணித்தியாலங்களுள் கடும்புப்பால் குடிக்க ஆரம்பிக்கின்றது. கன்று அப்படிக்குடிக்க முடியாவிடின் கன்றைப் பசுவினது பால்மடிக்கு அருகில் கொண்டு சென்று குடிக்க வைக்க வேண்டும். இப்படியாக 3 நாட்களுக்கு தொடர்ந்து கொடுக்கவும்.

## கடும்புப்பால் :-

- நோய்களுக்கு எதிரான தடுப்புச்சக்தியை வழங்கல்.
- குடலினது சரியான தொழிற்பாட்டிற்கு மல இளக்கியாக தொழிற்படுகிறது.
- கன்றுகளுக்கு நல்ல போசாக்கு உணவாக கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும்புப்பால் பின்வருவனவற்றை உள்ளடக்கியது :-

| | |
|---|---|
| கொழுப்பு | 3.37 % |
| திண்மப்பொருள் (Solids) | 28 – 31 % |
| கேசின் | 4.83 % |
| அல்புமின், குளோபியூலின் | 15.85 % |
| வெல்லம் | 2.48 % |
| கனி உப்புக்கள் | 1.78 % |
| நீர் | 43.43 % |

## செயற்கையான கடும்புப்பால்

கன்றிற்கு தாய்ப்பசு இறப்பதனாலோ அல்லது வேறு ஏதாவது காரணங்களாலோ கடும்புப்பால் கிடைக்கப் பெறுவிடின் வளர்ப்புத்தாய் மூலம் கன்றுகளுக்குப் பால் கொடுக்கலாம். வளர்ப்புத்தாயும் கிடைக்காவிடின் செயற்கையான கடும்புப்பால் பின்வரும் பதார்த்தங்களைப் பாவித்து தயாரிக்கலாம்.

| | |
|---|---|
| முட்டை வெண்கரு | 6 |
| பசுப்பால் | 1.5 பைந்து |
| சுத்தமான நீர் | 0.5 பைந்து |
| மீன் எண்ணெய் | 1 தேக்கரண்டி |
| ஆமணக்கு எண்ணெய் | 1 தேக்கரண்டி |
| நுண் உயிர் கொல்லி | 0.5 கிராம் |

ஐரோப்பிய இன கன்று ஒன்றிற்கு நாளாந்த கடும்புப்பால் தேவை :- 6 – 8 இறு.
இந்திய இன கன்று ஒன்றிற்கு நாளாந்த கடும்புப்பால் தேவை :- 4 – 6 இறு.

வளர்ப்புத்தாய்ப் பசுவும் கிடைக்கப் பெறுவிடின் 3 நாட்களுக்குப் பின்னர் நாளாந்தம் உடல்நிறையின் 10 % அளவு பால் கொடுக்கப்படல் வேண்டும். பால் கிடைப்பதும் கஷ்டமாக இருந்தால் பின்வரும் பால்பிரதியீடுகள் கொடுக்கப்படும்.

## பால் பிரதியீடுகள்

| | |
|---|---|
| ஆடைநீக்கிய பால் அல்லது பால்மா | 70 இறு. |
| உலர் பாற்கட்டி | 10 இறு. |
| லெசித்தீன் | 2 இறு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு எண்ணெய் 10 இரு.
இரு கல்சியம் பொஸ்பேற்று 1.7 இரு.
நுண்ணுயிர் கொல்லி
நுண் மூலகங்கள்

நாளாந்தம் கன்றிற்கு உடல்நிறையின் 10% அளவு பால் கொடுக்கப்படல் வேண்டும்.

**கன்றைத் தாய்பசுவிலிருந்து வேறாக்கல் :-**

பசுவிலிருந்து கன்றைப் பிரிப்பதற்கு 24 மணியினுள் வேறாக்கல் வேண்டும். அவ்வாறு பிரிக்கத்தவறினால் பின்னர் :-

- வாளிமூலம் பாலூட்டுவது மிகவும் கடினமாகும்; அத்துடன்
- கன்று இன்றி தாயிலிருந்து பால் கறப்பதும் கஷ்டமாக இருக்கும்.

**கன்றைத் தாய்ப்பசுவிலிருந்து வேறாக்குவதன் மூலம் :-**

கன்றிற்குத் தேவைப்படுகின்ற அளவு பால் கொடுக்க முடியும்.
- தாய்ப்பசுவினது சரியான உற்பத்தியைக் கணிக்கலாம்.

ஐரோப்பிய இனங்களுக்கு இம்முறை சிறந்தது. கன்றை இன்னொரு தாய்ப்பசுவிலிருந்து பால் குடிப்பதற்கு விடவும். கன்றிற்காக ஒரு முலைக் காம்பிலிருந்து பால்கறக்காது விட்டுவிடவும். ஏனைய முலைக்காம்புகளிலிலிருந்து பால் கறந்து முடிந்த பின்னர் கன்றைத் தாய்பசுவுடன் விட்டு விடவும். ஆனால் கன்று தாய்ப்பசுவிலிருந்து பால்குடிக்கும் போது—

- எவ்வளவு பாலைக் கன்று குடித்துள்ளது என்று அறிவது கடினம்.
- தாய்ப்பசுவின் பால் உற்பத்தியைக் கணிப்பது கடினம்.
- இது பால் கறப்பதற்கு ஒரு தூண்டுதல் ஆகும். எனவே கன்று இல்லாதபோது பால் கறப்பது பிரச்சினை ஆகும்.

**வீட்டமைப்பு :-**

கன்றுகளைத் தனிப்படுத்தி அவற்றிற்கான கூடுகளில் விடும்போது வரட்சியான காலங்களில் குறைந்தது 2 மாதங்களும், மாரிகாலங்களில் குறைந்தது 4 மாதங்களும் அவற்றிற்குள்ளேயே வளரவிட வேண்டும். கன்றிற்கான கூடு சுத்தமான, உலர்ந்த இடத்தில் வைக்கப்படும். இதனை வீசும் காற்றிற்கு வெளிப்படுத்தக்கூடாது. முதலாவது மாதம் முடியும்வரை கன்றுகளைத் தனியாக வளர்க்கவேண்டும். முதலாவது மாதம் முடிவடைந்த பின்னர் பல கன்றுகளைப் பொதுவான ஒரு அறையில் வளர்க்கலாம்.

**இட அளவு :-**

0 – 1 மாதம் – 0.75 ச.மீ² (8 ச. அடி)
1 – 2 மாதம் – 1.5 ச.மீ² (15 ச.அடி)
2 – 3 மாதம் – 2.8 ச.மீ² (30 ச. அடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணவூட்டல் :-**

கன்றுகளுக்கு உணவூட்டலில் பால் இன்றியமையாததொன்றாகும். கன்றுகளுக்குப் போதுமான அளவு பால் கொடுக்கப்படாவிட்டால் அவை பலவீனமடைந்து சிறிது நாட்களில் இறக்கவும் நேரிடலாம். கன்றுகளுக்கு 3 மாத வயது வரும் வரைக்கும் தினமும் பால் கொடுக்கப்பட வேண்டும். அட்டவணையில் காட்டப்பட்ட அளவைவிடக் குறைந்தளவுபால் கொடுக்கப்படலாகாது. கன்றுகளுக்கு உணவூட்டும்போது பாலுடன் செறிவுத்தீன், உலர்புல், பச்சை இலைகுழை வர்க்கங்கள், கனிப்பொருள் ஆகியவை கலக்கப்பட வேண்டும். தாயிடமிருந்து நேரடியாகப் பாலைப் பருகவிட்டோ அல்லது வாளி மூலமோ பாலைக் கன்றுகளுக்கு கொடுக்கலாம்.

**வாளி மூலம் பால் கொடுத்தல் :-**

அதிகளவு பாலை உற்பத்தி செய்யும் பசுக்களுக்கு இம்முறை உகந்ததாகும். கன்றுகளை அவற்றின் பிறப்பு நிறையை அடிப்படையாகக் கொண்டு சிறிய கன்றுகள் (15 - 20 கி.கி.) பெரிய கன்றுகள் ( 20 - 25 கி.கி.) எனப் பாகுபாடு செய்யலாம். உடன் கறந்த பாலை அது சூடாக இருக்கும் போதே அட்டவணை 1 ல் கூறப்பட்ட அளவுகளின் படி கொடுத்தல் வேண்டும்.

பால் குளிர்மையாக இருந்தால், உடல் வெப்பநிலைக்கு சூடுகாட்டல் வேண்டும். கன்றுகளுக்கு பால் கொடுக்கப்பாவிக்கும் பாத்திரங்களைப் பாவிக்க முன்னரும் பின்னரும் சவர்க்காரம் கொண்டு துப்பரவு செய்யவேண்டும்.

கீழ்வரும் அட்டவணை கன்றின் வயது, உடல்நிறை என்பவற்றிற்கேற்ப அவற்றிற்குத் தினந்தோறும் கொடுக்கப்படவேண்டிய பாலின் அளவைக் காட்டுகிறது.

| கன்றின் வயது (வாரம்) | நாளொன்றிற்கு தே.பா.அளவு (லீற்றர்) | | நாள் ,ஒன்றிற்கு | ஒரு தடவையில் கொ.பால் மி.லிற். | |
|---|---|---|---|---|---|
| | பெரிய | சிறிய | | பெரிய | சிறிய |
| 0 – 1 | 2.1 | 2.7 | 3 | 700 | 900 |
| 1 – 2 | 2.4 | 3.0 | 2 | 1,200 | 1,500 |
| 2 – 4 | 2.5 | 2.5 | 2 | 1,250 | 1,250 |
| 4 – 8 | 2 .0 | 2.0 | 2 | 1,000 | 1,000 |
| 8 –10 | 1 .0 | 1 .0 | 1 | 1,000 | 1,000 |
| 10 12 | 0.5 | 0.5 | 1 | 500 | 500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையான முறையில் பராமரித்தல் - 1

ஏதாவது ஒரு காரணத்தினால் வாளி மூலம் பாலூட்ட முடியாவிடின், கன்றுகளை இயற்கையான முறையில் பாலூட்டி வளர்க்கலாம். நாள் ஒன்றிற்கு 4 - 5 லீற். பால் கறக்கும் அதாவது இரு தடவைகள் பால்கறக்கும் பசுக்களின் கன்றுகளுக்கு இம்முறை உகந்தது.

அட்டவணை 2 இல் காட்டப்பட்டது போன்று ஒவ்வொரு தடவையும் கன்றுகளுக்குத் தேவையான எண்ணிக்கை முலைக்காம்புகள் தவிர்ந்த ஏனைய முலைக்காம்புகளில் பாலைக்கறக்க வேண்டும். பின்னர் கன்றைக் குடிக்க விடவேண்டும்.

### அட்டவணை 2

இவ் அட்டவணை கன்றுகளின் வயதிற்கேற்ப காலையும் மாலையும் கன்றுகள் பாலைக் குடிப்பதற்காக, கறவாமல் விடப்படும் முலைக்காம்புகளின் எண்ணிக்கை பற்றிய விபரங்களைத் தருகின்றது.

| கன்றுகளின் வயது | கறக்காது விடப்படும் முலைக் காம்புகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | காலை | மாலை |
| 0 - 8 | 2 | 2 |
| 8 - 10 | 1 | 1 |
| 10 - 12 | 1 | - |

கன்றுகளை முலைக்காம்பிலிருந்து 5 நிமிடத்திற்கு பால் குடிக்க விடவும்.

## இயற்கையான முறையில் பராமரித்தல் - 2

இம்முறையில் காலையில் மட்டும் பால் கறக்கும், குறைந்தளவு பால் தரும் பசுக்களின் கன்றுகளுக்கு இம்முறை உகந்தது. கன்று தாய்ப்பசுவிலிருந்து முதல் நாள் மாலையில் இருந்து அடுத்தநாள் காலை வரை பிரித்துவைக்கப்படும் . பின்னர் பால் கறந்ததும் கன்றைத் தாயுடன் மாலைவரை ஒன்ருக இருக்க விடவும்.

### அடர்வுத்தீன் :-

மூன்ருவது வாரத்திலிருந்து 4ம் மாதம் வரை அடர்வுத்தீன் கொடுக்கலாம். ஆரம்பத்தில் அடர்வுத்தீன் துணிக்கைகளாகக் கொடுக்கப்படும். நாள் ஒன்றிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்படவேண்டிய அடர்வுத்தீன், உலர்புல் ஆகியன பற்றிய விபரங்களை அட்டவணை 3ல் இருந்து தெரிந்து கொள்ளலாம். உணவுத்தொட்டியில் எப்பொழுதும் போதியளவு உணவு வைத்திருக்கவும். கன்று ஒன்றிற்கு மொத்தமாக தேவைப்படும் அடர்வுத்தீனின் அளவு 30 கி.கிராம் ஆகும். 2 கிழமைகளில் உலர்புல் கொடுத்தல் வேண்டும். இது இரைப்பையின் வளர்ச்சிக்கு உதவும்.

**அட்டவணை 3**

| வயது (கிழமை) | சராசரி உடல் நிறை (கி.கி) | அடர்வுத்தீன் | | உலர்புல் | |
|---|---|---|---|---|---|
| | | நாளாந்தம் (கிராம்) | மொத்தம் (கி.கி) | நாளா (கிராம்) | மொத் கி.கிராம் |
| 2 – 3 | 26 | 50 | 0.4 | 50 | 0.4 |
| 3 – 4 | 28 | 100 | 1.1 | 60 | 0.8 |
| 4 – 5 | 30 | 150 | 2.1 | 175 | 2.0 |
| 5 – 6 | 33 | 200 | 3.5 | 220 | 3.5 |
| 6 – 7 | 35 | 220 | 5.0 | 275 | 5.5 |
| 7 – 8 | 37 | 240 | 6.7 | 350 | 8.0 |
| 8 – 12 | 45 | 350 | 17.5 | 625 | 27 |
| 12 – 16 | 53 | 450 | 31.0 | 925 | 55 |

4 – 12 மாத வயதுடைய கன்றுகளுக்கு 18 % புரதத்தைக் கொண்ட அடர்வுத்தகேன் உண்ணக் கொடுக்கலாம். நாள் ஒன்றுக்கு கொடுக்கப்படவேண்டிய கன்றுத்தீன் பற்றிய விபரங்கள் அட்டவணை 4ல் தரப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு கொடுக்கப்படவேண்டிய கன்றுத்தீனில் பாதியை காலை நேரத்திலும், மிகுதியை மாலையிலும் கொடுக்கலாம். ஒவ்வொரு கி.கிராம் தீனும் 1 லீற். நீர் என்ற விகிதத்தில் நீருடன் கலந்து கொடுக்கலாம். 12 மாதம் தொடக்கம் 24 மாத வயது வரை சாதாரணமாக பசுக்களுக்கு கொடுக்கப்படும் தீனை கொடுக்கலாம். இவ் ஆகாரத்தை—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 4

| வயது (கிழமை) | சராசரி உடல்நிறை (கி.கி) | அடர்வுத்தீன் நாளாந்தம் (கி.கி) | மொத்தம் (கி.கி) | பசுந்தீவனம் (ஐதுத்தீன்) (கி.கி) |
|---|---|---|---|---|
| 4 – 5 | 65 | 0.5 | 15 | 6 |
| 5 – 6 | 78 | 0.5 | 30 | 8 |
| 6 – 7 | 92 | 0.5 | 46 | 10 |
| 7 – 8 | 105 | 0.75 | 68 | 11 |
| 8 – 9 | 115 | 0.75 | 91 | 12 |
| 9 – 10 | 125 | 0.75 | 114 | 14 |
| 10 – 11 | 138 | 0.78 | 137 | 16 |
| 11 – 12 | 150 | 0.75 | 160 | 17 |
| மாதம் | | | | |
| 12 – 15 | 170 | 1 | 191 | 18 |
| 15 – 18 | 200 | 1 | 182 | 21 |
| 18 – 21 | 235 | 1 | 274 | 25 |
| 21 – 24 | 260 | 1 | 365 | 30 |

காலை மாலை இரு வேளைகளிலும் நீருடன் கலந்து கொடுக்கவேண்டும். மொத்த அடர்வுத்தீன் – 160 கி.கி/கன்று ஒன்றிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடர்வுத்தீனும், பசுந்தீவனமும் 4 – 12 கிழமை கன்றுகளுக்கும், 12 – 24 மாத நாகுகளுக்கும் வழங்கப்படும்.

- 4 – 12 மாத கன்றுகளுக்கு 18 % பண்படாத புரதம் கொண்ட அடர்வுத்தீனைக் கொடுக்கவேண்டும்.

- 12 – 24 மாத கன்றுகளுக்கு 16 % பண்படாத புரதம் கொண்ட அடர்வுத்தீனைக் கொடுக்கவேண்டும்.
- பச்சைத்தீவனம் : மற்றைய உணவு – 3 : 1 என்ற விகிதத்தில் இருக்கவேண்டும்.

## பாலூட்டும் கன்றுகளுக்கான உணவுக்கலவை :-

| | |
|---|---|
| அரிசித்தவிடு | 20 இரு. |
| சோளம் | 45 இரு. |
| தேங்காய் /எள்ளுப் புண்ணாக்கு | 23 இரு. |
| மீன் தூள் | 10 இரு. |
| கனியுப்புக்கலவை | 02 இரு. |

## தாய்ப்பசுவிலிருந்து வேறுக்கப்பட்ட கன்றுகளின் உணவுக்கலவை

(3 மாதங்களுக்குப் பின்னர்)

| | |
|---|---|
| தேங்காய்ப் புண்ணாக்கு | 30 இரு. |
| சோளம் | 20 இரு. |
| எள்ளுப் புண்ணாக்கு | 10 இரு. |
| ஆடைநீக்கிய பால் | 20 இரு. |
| அரிசித்தவிடு | 16 இரு. |
| கனியுப்பு | 03 இரு. |
| உப்பு | 01 இரு. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கன்றினது வளர்ச்சி வீதத்தை முதிர்ந்த விலங்குகளுடன் ஒப்பிடல்**

| | |
|---|---|
| பிறக்கும் போது | 7 % |
| 2 வது மாதத்தில் | 10 % |
| 6 ,, ,, | 25 % |
| 9 ,, ,, | 40 % |
| 1 வருடத்தில் | 50 % |
| 1 1/2 ,, | 65 % |

**கன்றினது வளர்ச்சி வீதம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலர்புல் : -

புற்கள் ; அவரையினத்தாவரங்கள் போன்றவை முற்ற முன்னர் அவை இளம் புல்லாக இருக்கும்போதே அவற்றை வெட்டி உலர்புல் தயாரிக்கலாம். (உலர்புல் தயாரிப்பு பற்றி உங்கள் கால்நடை விஸ்தரிப்பு சேவையாளரைக் கேட்டறியவும்) அவற்றை மழை படாமல் பாதுகாத்துக் கட்டாக அடுக்கிவிட வேண்டும். அட்டவணை 3 இல் நாளாந்தம் கொடுபட வேண்டிய உலர்புல்லின் அளவு பற்றிய விபரங்கள் கூறப்பட்டுள்ளது. உலர்புல் கிடைக்கவில்லையென்றால் நல்ல தரமான இளம்புல் கொடுக்கப்படலாம். ஒரு கன்று உட்கொள்ளும் உடன் புல்லின் அளவு அது உட்கொள்ளும் உலர்புல்லைவிட கிட்டத்தட்ட 5 மடங்காக இருக்கும். கன்று ஒன்றிற்கு 2 கிழமையிலிருந்து 3 மாதத்திற்குத் தேவையான உலர்புல் சேமித்து வைத்தல் வேண்டும்.

கனிப்பொருட்கலவை சேர்த்தல் : -

கனிப்பொருள், உப்புக்கள் பற்றாக்குறையினால் நோய்கள் ஏற்படாவண்ணம் இருக்க கன்றுகளுக்கு எந்நேரமும் கனிப்பொருட்கலவையோ, கனிப்பொருட் கட்டியோ கிடைக்கக்கூடிய வண்ணம் இருத்தல் வேண்டும். கனிப்பொருள் கலவை அல்லது கட்டியை ஒரு மூடியில்லாத பாத்திரத்தில் போட்டு கன்றுகள் நக்கி உட்கொள்ள வசதியாக வைக்கவேண்டும். இப்பொருட் கலவையின் மேல் தண்ணீர் சிந்தாமல் பாதுகாக்கவேண்டும்.

வேட்கைக் காலம் : -

ஐரோப்பிய இன நாகு கன்றுகள் நல்ல போஷணையின் கீழ் பராமரிக்கப்படின் 8 – 12 மாதத்தில் பால் முதிர்ச்சியடைந்த நிலையை அடையும். இவ்வின பசுக்களை 12 – 15 மாதத்தில் சினைப்படுத்தலாம். இக்காலத்தில் இவற்றின் நிறை 500 – 600 இறாத்தல் வரை இருத்தல் அவசியமானதாகும்.

உள்நாட்டுப்பசுக்கள் 20 – 25 மாதத்தில் பருவமடையும்.

வேட்கைக் குறிகள் : -

பசு வேட்கையில் இருக்கும்போது பின்வரும் அறிகுறிகளை வெளிக்காட்டும்.

1. வேட்கையின் ஆரம்பத்தில் வேட்கைக்கு வரும் பசு மற்றப்பசுக்களில் தாவும். ஆனால் வேட்கையின் உச்சத்தில் நிற்கும்போது மற்றைய பசுக்களையோ காளைகளையோ தன்மேல் தாவவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. யோனிப் பகுதியிலிருந்து முட்டை வெண்கரு போன்ற சளியம் வெளிவரும்.

3. வாலை உயர்த்தி ஒரு பக்கம் பிடித்துக் கொள்ளும்.

4. அடிக்கடி கத்தும், அமைதியற்றுக் காணப்படும்.

5. பின்பக்கத்தை உயர்த்திக் கொண்டு, அடிக்கடி சிறுநீர் வெளியேற்றும்.

இக்குறிகள் ஒன்றோ அல்லது அதற்கு மேலோ காணப்படுவதை அவதானித்தால் சினைப்படுத்தும் ஆரம்ப வேலைகளைச் செய்தல் வேண்டும். பசுக்களில் காமவெப்பச் சக்கரம் 21 நாட்களைக் கொண்டது. இதன்போது வேட்கைக் காலம் 18 – 21 மணித்தியாலங்கள் வரை நீடிக்கும். இக்காலத்துள் இப்பசுவை செயற்கை முறையில் சினைப்படுத்துவதாயின் கால்நடை வைத்தியருடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். இயற்கை முறையில் சினைப்படுத்துவதாயின் நல்ல இனக்காளைகளைக் கொண்டு சினைப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட வர்க்கங்களுக்கு உதாரணமாக ஐரோப்பிய இனங்கள் சினைப்படுத்தலின்போது இருத்தல் 500 – 600 வரை அல்லது முழுநிறையில் 60 % ஐக் கொண்டிருத்தல் வேண்டும்.

பசுக்களில் தொடர்ந்து பால் உற்பத்தியைப் பெறுவதாயின் ஒரு வருடத்தில் ஒரு கன்று வீதம் பெறுதல் வேண்டும். இதற்காக கன்று ஈன்ற பின் 60 – 90 நாட்களின் பின்பு சினைப்படுத்தல் வேண்டும். அதாவது கன்று ஈன்ற பின்பு 3 வது தடவையாக வேட்கைக் குறிகளைக் காணும்போது சினைப்படுத்தல் வேண்டும்.

## நோய் பராமரிப்பு

பொதுவாகக் கன்றுகள் குடற்புழுக்களாலோ அன்றேல் உண்ணிகளாலோ பாதிக்கப்படலாம். இவ் ஒட்டுண்ணிகள் பாரதூரமான விளைவுகளைத் தருவதால் சிரமமாக பூச்சிமருந்து உண்ணியகற்றும் மருந்து பாவித்து இவற்றை அகற்ற வேண்டும். அத்துடன் சில முக்கிய நோய்களுக்கு எதிராக நோய்த்தடுப்பு மருந்தும் கொடுக்க வேண்டும்.

### குடற்புழுக்களுக்கெதிராக பூச்சி மருந்து கொடுத்தல் : -

கன்றுகளில் குடற்புழுக்களை அழிப்பதற்கு 1ம், 3ம், 9ம், 18ம் மாதங்களில் பூச்சி மருந்து கொடுக்கப்படல்வேண்டும். கன்றுகளில் குடற்புழுக்கள் அளவுக்கதிகமாக தொற்றிக் காணப்பட்டால் 6வது, 12 வது மாதங்களிலும் பூச்சிமருந்து கொடுக்கப்பட வேண்டும். 2 கிராம் " ரெருமிசோலை " க் கொண்ட " போலஸ் " அரசாங்கக் கால்நடை வைத்தியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அட்டவணை 5 இல் இந்த " போலஸ் " கொடுக்கப்பட வேண்டிய முறை பற்றிக் கூறப்பட்டுள்ளது. போலஸ் துண்டை சிறு சிறு துண்டுகளாக்கி அவற்றை 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பை நீர் கொள்ளக்கூடிய குறுகிய வாய்கொண்ட பிளாஸ்டிக் போத்தலினுள் போட்டு அளவுக்கு நீர் சேர்த்து நன்கு குலுக்கி, மிகவும் கவனமாக பருக்கவேண்டும்.

**அட்டவணை 5**

| வயது (கிழமை) | பூச்சிமருந்து (போலஸ் எண்ணிக்கை) | நீர் (கோப்பை) |
|---|---|---|
| 1 | 1/2 | 1/2 |
| 3 | 1/2 | 1/2 |
| 9 | 1 | 1 |
| 18 | 1 1/2 | 1 1/2 |

எருமைகளுக்கு வயது 12 நாள், பின்னர் 3 மாதத்தில் புழுக்களுக்கெதிரான பூச்சி மருந்து கொடுக்கப்படும்.

**உண்ணியகற்றல் : -**

மூன்று வார இடைவெளிகளில், கன்று அதன் தாய்ப்பசு மற்றும் பண்ணையிலுள்ள ஏனைய பசுக்களையும், பூச்சிகொல்லிகளையும் பாவித்து உண்ணியகற்றலாம். 15 கிராம் பூச்சி கொல்லியைக் கொண்ட ஒரு பக்கட்டை மூன்று சம பங்குகளாகப் பிரித்து அவற்றில் ஒரு பகுதியை 4.5 லீற். (1 கலன்) நீருடன் கலந்து தெளிக்கலாம். ஒரு கலன் நீரில் கரைக்கப்படும் மருந்து ஒரு பசுவிற்கும் கன்றிற்கும் போதுமானதாகும்.

உண்ணிக்கெதிரான மருந்தைக் கொடுக்கும்போது, மருந்து கண், நாசி, போன்றவற்றைத் தொடாதவாறு வழங்கல் வேண்டும். அசன்ரோல் இவ் உறுப்புகட்கு கிட்டவாக அல்லது தூரமாகப் பூசுதல் வேண்டும்.

**கருச்சிதைவு நோய்க்கெதிரான தடுப்பசி போடல் : -**

இந்நோயானது மலைநாட்டிலும் மத்திய நாட்டுப் பகுதிகளில் பொதுவாக ஏற்படுவதில்லை. ஆனால் இலங்கையில் ஏனைய வலையங்களில் அதிகளவு ஏற்படுகிற ஒரு நோயாகும். எனவே அவ்விடங்களில் தடுப்பூசி மருந்து போடுதல் மிகவும் முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கக் கால்நடை வைத்தியருடன் தொடர்பு கொண்டு உங்கள் கன்றுகளுக்கு 4 – 6 மாதத்தில் புறுசெல்லா $S_{19}$ தடையூசி ஏற்றிக்கொண்டால் உங்கள் கன்றுகளை அந்நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

## உண்ணிக்காய்ச்சலுக்கெதிராக தடுப்பூசி மருந்து :-

### (பிரி இமியூனைசேஷன் வழங்கல்)

மலைநாட்டுப்பகுதிகளிலும், மத்திய மலைநாட்டுப்பகுதிகளிலும் உள்ள கன்றுகளுக்கு உண்ணிக்காய்ச்சல் நோய்க்கு எதிராக நான்காவது மாதத்தில் தடுப்பூசி மருந்து வழங்கப்படல் வேண்டும். இதற்காக உங்கள் அரசாங்கக் கால்நடை வைத்தியருடன் தொடர்பு கொள்ளலாம்.

## வயிற்றோட்டம் :- (கழிச்சல்)

வயிற்றோட்டமானது கன்றுகளுக்கு ஏற்படும் பொதுவான நோயாகும். கன்றுகளுக்கு வயிற்றோட்டம் ஏற்படும்போது கன்றின் உடலிலிருந்து நீரிழக்கப்படுவதுடன், இறக்கவும்நேரிடுகிறது. உடலிலிருந்து இழக்கப்படும் நீர் உப்பு ஆகியவற்றை ஈடுசெய்வதற்கு அதிகளவு நீர், உப்புக்கள் கொடுக்கப்படல் வேண்டும். எனவே முதல் உதவியாக 2 மேசைக்கரண்டி சீனி, அல்லது உப்புக் கலந்த இளஞ்சூடான தண்ணீர் வழங்கப்படல் வேண்டும். வயிற்றோட்ட சிகிச்சைக்கு உடனடியாக மிருகவைத்தியருடன் தொடர்பு கொள்ளவும்.

## நியூமோனியா :-

கன்றுகள் அதிகமாக குளிர் காற்றோட்டமுள்ள இடங்களில் வளர்க்கப்பட்டால் நியூமோனியா இலகுவில் ஏற்படும். எனவே கன்றிற்காக அமைக்கப்படும்பெட்டி அளவான வெளிச்சத்தைப் பெறக்கூடியதாகவும், தகுந்த காற்றோட்டம் கிடைக்கக்கூடியதாயும் இருத்தல் வேண்டும். இடமானது சுத்தமானதாகவும் உலர்ந்ததாகவும் இருத்தல் வேண்டும். கன்றுகளுக்கு போதியளவு இடத்தை வழங்கும்போது நியூமோனியா ஏற்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ள உதவியாக இருக்கும்.

நல்லமுறையான கன்றுப் பராமரிப்பிற்கு பின்வரும் பதிவேட்டுப் பத்திரங்களை வைத்துக் கொள்வது சிறந்தது. வளர்ச்சி வீதம், உணவூட்டல், நோய்த்தடுப்பும், சிகிச்சையும், தாய்ப்பசுவினது பால் உற்பத்தி போன்றவை ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள உங்கள் பகுதி மிருக வைத்தியருடன் தொடர்பு கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாக்கம் : - டாக்டர். ரி. கந்தையா

தட்டச்சு : - றஞ்ஜினி ஜேம்ஸ்

சித்திரம் : - பி.கே. திஸ்ஸ குமார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org